# அபூர்வ சம்பாத்ய முறைகள்

Published by
R. SESHAN
EDITOR
SRIRANGAM

PRINTED AT THE
S. V. V. PRESS, TRICHY

[Rights Reserved] 1926 [Price As. 12
[பன்னிரெண்டணா

41

X9B
N26
224195

# முகவுரை.

---

ஆங்கிலத்தில் சில நாட்களுக்குமுன்னால் வெளியிடப்பட்டுள்ள How to get an income? என்ற புத்தகத்தை நம் சகோதரசகோதரிகள் வாசித்து அவர்கள்எழுதியுள்ள கண்ணியம் வாய்ந்த பிரிய வசனங்களின் தூண்டுதலால்மட்டுமே இந்த அபூர்வ சம்பாத்ய முறைகள் என்ற நூல் வெளியிடலானேன். ஹௌ டு கெட் என் இன்கம் என்றஎன்னு ஆங்கிலபுத்தகத்தையே தமிழில் அபூர்வ சம்பாத்ய முறைகள் என்று பெயரிட்டு தமிழ்படுத்தி தமிழ் மக்கள் சகலரும் ஆண், பெண் இருதிறத்தினரும் தமிழ் வாசிக்க எழுத அறிந்த அனைவரும் இந்த நூலை வாசித்து நல்ல பலனை அடைந்து நம் தமிழ் மக்கள் சுகஜீவிகளாயும், தனவந்தர்களாயும், உலகம் போற்றியுள்ள சித்தர்கள் ஜனித்துள்ள நம் அரும்பெரும் தமிழ் நாட்டின் உண்மைப் புத்ர புத்ரிகளாய் ஜொலிக்கவேண்டுமென்பதே இதைப் பதிப்பித்துள்ள சிறியேனின் அபிப்பிராயம். மற்றும் ஆங்காங்கு பிழைக்க வழிதெரியாது மேல் நாடுகளுக்குக்கூலிக்கு வேலைசெய்ய வெளியேறி தற்பொழுது கஷ்டமடைந்துள்ள நம் தமிழர்களுக்கு இது ஓர் ஆபத்து சகாகியே என்று சொல்வதும் ஏற்றுக்கொள்ளத்தகும்.

நிற்க ஓர் சிறுமுதல் முதற்கொண்டு ஆயிரம், பதினாயிரம் முதலிய தொகைகளை கைமுதலாக வைத்துக்கொண்டு வியாபாரம் செய்பவர்களுக்கும், சுயேச்சையாக ஓர் தொழிலை செய்து சந்தோஷத்தையும், பெரும்லாபமும் அடையவிருந்த அவாவுடைய புண்ய சீலர்களும் நம் தமிழ் நாட்டில் பதினாயிரக்கணக்காக இருந்துவருகின்றனர். அன்னார் அனைவோருக்கும் அபூர்வ சம்பாத்யமுறைகள் என்ற நமது சிறிய புஸ்தகம் பொன்னேபோல் நாடத்தக்கது; நவமணியேபோல் போற்றத்தக்கது.

மற்றும் இந்நூலில் குறிப்பிட்டுள்ள சரக்குகள் அனைத்தும் ஆங்கில மருந்து சரக்கு வியாபாரியிடம் (English Druggists and Chemists) எளிதில் கிடைக்கக்கூடியது. பெண் மக்களும் வீட்டுவேலை முடிந்த பிறகு தமக்குக்கிடைத்த சாவகாசநேரத்தில் இந்நூலின் குறிப்பிட்டுள்ள ஏதாவது ஒன்று இரண்டு சாமான்களை முறைப்படி செய்து சுகஜீவனமும், சந்தோஷ குடும்ப நிர்வாகமும் செய்யலாம் என்பதே நமது துணிபு.

பலரும் இதனை எமது ஆங்கில நூல் எவ்வாறு ஆதரிக்கப்பட்டு முதல்பதிப்பின் இரண்டாயிரம் காப்பிகளும் சொற்பகாலத்திற்குள் செலவானதோ, அதுபோன்று எம்மை ஆதரித்து இப்புத்தகத்தின் பலபதிப்புகளை அச்சிடுவதற்கு ஏற்ற உதவியை அளிக்குமாறு வேண்டுகின்றேன்.

பொதுஜன ஊழியத்தையே பிரதானமாகக்கொண்டுள்ள நான் அருமைப்பொக்கிஷக்களஞ்சியம் எனத்தகும் இந்த அரிய நூலை ஏழை பணக்காரர் என்ற வித்தியாசமின்றி சகலரும் வாசிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் மிகவும் குறைந்த சந்தாவாகிய பனிரெண்டணுவாக வைத்துள்ளோம். தமிழ் மக்களே! இந்நூலைக் கவனமாகவும் தெளிவாகவும் வாசித்தறிந்து உம் சக்திக்கும் உம் கைமுதலுக்கும் ஏற்ற தொழிலைச் செய்து உங்கள் நிலைமையை மேன்மேலும் விருத்தி செய்து கொள்ளுங்கள். கடவுளும் உமக்குப் பூரண கடாக்ஷத்தை அளிப்பாராக.

ஆர். சேஷன்

# ஸ்வராஜ்ய சிகப்புமை

## விளம்பரம் செய்யுமுறை

தேவை.---மாதச்சம்பளத்திலும் கமிஷனிலும் நமக்கு ஏஜெண்டுகள் தேவை--உலகப்பிரக்யாதி பெற்றதும், மிகுந்த பிரஸித்தி அடைந்ததும், தற்காலத்தில் விற்பனை மார்க்கட்டில் மிக்கச் சிறப்படைந்ததுமான நமது சிகப்பு இங்கி வியாபாரத்தை பெருகச்செய்ய ஏஜெண்டுகள் தேவை. ஸ்வராஜ்யகோஷம் நர்த்தனமிடுகின்ற இக்காலத்தில் நம்மவர்களின் பணத்தைக் கொண்டும்முயற்சியினாலும் தயாரிக்கப்பட்டநமதுசிகப்புமையை ஆதரியுங்கள்; இது ஒவ்வோர் வீட்டிற்கும் ஆபீஸிற்கும் முக்கிய தேவை வியாபாரிகளுக்கு பிரத்தியேக சார்ஜ்.

............அவுன்ஸ் அடங்கிய புட்டி ஒன்றுக்கு விலை ரூ.

நமது விலாசம்:....

# ஸ்வராஜ்ய சிகப்புமை

**சரக்குப்பட்டோலை:—**

பிரேஸில் வுட் (Brazil Wood) 2 அவுன்ஸ்
மியூரியேட் ஆப்டின் (Muriate of Ton ½ டிராம்
கம் அராபிக் (Gum Arabic) 1 டிராம்

செய்யும் முறை:— மேற்கண்ட சரக்குகளை ஒரு சட்டியில்

போட்டு 32 அவுன்ஸ் தண்ணீர் விட்டு அது பாதியாக வற்றும் வரையில் நன்ருகக் கொதித்தபின் வடிகட்டி 8 அவுன்ஸ் ஸீஸாக்களில் ஊற்றிக்கெட்டியாகக் கார்க்செய்து வைத்துக்கொள்ளுங்கள்.

## மற்ருெரு முறை

ஒரு சேர் ஜலத்தில் 4 அவுன்ஸ் பச்சைலாக்கை (அரக்கு மெழுகு) கொதிக்கவை. வைத்த ஜலத்தில் மூன்றில் இரண்டு பங்கு வற்றும் வரையில் கொதிக்கவை. பிறகு கெட்டியான ஓர் கைக்குட்டையினுல் அதை வடிகட்டவும். பிற்பாடு எடுத்து சீசாக்களில் ஊற்றிவைத்துக்கொள்ளவும். இது மிகவும் எளிதானதும் பெயர்பெற்ற முறை.

## முக்கிய குறிப்பு

தற்சமயம் இந்தியா வருமையை அடைந்து இருக்கின்றது என்றும் அவ்வருமையை நாட்டை விட்டோட்டுவதற்கு புராதன கைத்தொழில்களை தற்போதிய தேவைக்குத் தகுந்தவாறு திருத்தி அமைத்து புரிபாலிக்கவேண்டுமென்றும் சிக்கனச்செலவு தளகர்த்தர்கள் (Economic Experts) பலகாலும் முறையிட்டு வருவதை நாம் எல்லோரும் அறிவோம். மற்றும் நம் நாட்டில் அன்னிய தேசங்களிலிருந்து ஏராளமான இங்கி புட்டிகள் இறக்குமதி செய்யப்படுவதையும் அறியாதார் இலர். மேலே கண்டுள்ள முறைப்படி செய்யப்பட்ட இங்கியின் பிர

காசத்திற்கும், கம்பீரதோற்றத்திற்கும், நீடித்து ஜொலிக்கக் கூடிய சக்திக்கும் அன்னியஇங்கி ஒப்பாகமாட்டாது. ஆரம்பத் தில்கவனமாய் ஓர்சிறியஅளவில்செய்து பரீக்ஷியுங்கள். உமக்குத் திருப்தியானபின்பு ஐந்துரூபாய் முதற்கொண்டு இருபது ரூபாய் வரையில் கிரையமுள்ள இங்கியை ஸாம்பிலாக (Sample) தக்க கனவான்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும், ஆபீஸுகளுக்கும் அனுப்பிவைத்து அவர்களுடைய நற்சாக்ஷி பத்திரத்தையும் பெற்று அதையும் நன்கு அச்சிட்டு துண்டுப்பிரசுர மூலமாய் ஜனங்களுக்குள் பரவச்செய்யுங்கள்.

சுமார் நாற்பது ரூபாயை இதற்கு ஓர் முதலாக வைத்துக் கார்யத்தை நடத்தி வந்தால் இந்த ரூபாய் நாற்பதும் கூடிய சீக்கிரத்தில் உம் தொழில் வன்மையினால் ரூபாய் நானூராகவும் நாலாயிரமாகவும் பெருகும் என்பதில் சற்றேனும் ஐயமில்லை. இந்த முறைகள் நம்மால் பரீக்ஷிக்கப்பட்டு பன்முறை வெளியில் அப்யாசிக்கப்பட்டும், போற்றப்பட்டும் இப்பொழுது தங்களுக்கு அதிர்ஷ்ட வசமாய்க் கிடைக்கின்றது. கொஞ்சம் கைமுதல் சிறிது சிறிதாகப் பெருக ஆரம்பித்தும் ஆங்காங்கு தக்க யோக்யதையுடைய சிலநபர்களை கமிஷன் பேரில் ஏஜெண்டாகவும் சிற்சில மாகாணங்களுக்கு ஸோல் ஏஜண்டாகவும் நியமித்து பல வாறும் தங்கள் தொழிலில் விருத்தியடையலாம்.

விளம்பரத்தினால் கோடிக்கணக்கான ரூபாயை அநேகர் சம்பாதித்திருக்கின்றார்கள் என்பது பிரத்யக்ஷமான விஷயம். பின்னும்உலகத்தில் நாள்தோறும் கோடிக்கணக்கான ரூபாய்கள் விளம்பர விஷயமாகச்செலவிடப்பட்டிருக்கின்றன. அப்பெரிய

துகைகள் வீணில் செலவிடப்பட்டிருக்கின்றனவா? அவ்வாறு பணத்தை வீணில் வாறி இறைப்பவர்களும் இந்த உலகத்தில் உண்டோ? என நாம் உம்மைப்பன்முறை கேட்க விரும்புகின்றோம். ஆங்காங்குள்ள தேசாபிமானிகளுக்கு தங்கள் இங்கியை அனுப்பிவைத்து அவர்கள் அளிக்கும் யோக்யதாப்பட்டத்தைப் பெற்று அதைத்துண்டுப்பிரசுரம் மூலமாகவும் விளம்பர மூலமாகவும் பிரகடனம் செய்யுங்கள்.

### லாப விபரம்.

இங்கிக்கைத்தொழிலில் கிடைக்கும் லாபத்தைப்போல் வேறு எந்தத்தொழிலிலும் கிடைக்காது. ஏனெனில் இதனில் சேரும் சரக்குகளில் நூற்றுக்கு தொன்னூறுமடங்கு வெருந்தண்ணீரேயாம் என்று நினைத்துக்கொள்ளுங்கள்.

## மாயப்பேனு (இங்கி இல்லாப்பேனு)

## (Magic Flow)

**விளம்பரம் செய்யுமுறை:-**

மாதம் நூறு ரூபாய் இந்த வியாபாரமூலமாக இதை விற்கும் ஏஜெண்டுகள் சம்பாதிக்கலாம். அடிக்கடி கடைக்குச் சென்று இங்கி தருவிக்கும் தொல்லையை இன்றுடனே ஒழியுங்கள். இங்கி இல்லாமலே இந்தப்பேனு எழுதுகிறது. நீங்கள்

இதுவரை இந்த அதிசயத்தைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? மற்ற விவரங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

நமது விலாஸம்:-

# மாயப்பேனா

## சரக்குப்பட்டோலையும், செய்யும் முறையும்.

உயர்ந்த ஜாதி கருநீல அனிலைன் (Aniline) சாயம் ஒரு நிறையாக எடுத்துக்கொள். தண்ணியோடு சேர்த்துப்பிசைந்து பிளாஸ்திரி பக்குவத்திற்குக்கொண்டுவா. பிறகு பிசின் சேர்த்து நன்றாய்ப்பிசைந்து அப்பள (பப்பட) மாவு பதமாக்கிக்கொள். பேனா நுனியில் இந்தப்பசையை ஒட்டு. இம்மாதிரியாக ஒரு பேனாவிலோ அல்லது பல பேனாக்களிலோ ஒட்டி பனிரெண்டு மணி நேரம் அதைக்காயப்போடு (நிழலில் காயப்போடவேண்டும்).

முக்கிய குறிப்பு:- எந்த எஃகுப்பேனாவையும் இந்த மாதிரியாகத்தயார் செய்துக்கொள்ளலாம்.

## உபயோகப்படுத்தும் முறை

பேனாவின் நுனிவரையில் தண்ணீரில் தோய்த்து எழுத ஆரம்பிக்கவும். பேனா மிகவும் நெய்ப்புள்ளதாக இருந்தால் நுனி நாக்கினால் தொட்டுக்கொடுக்கவும். எழுதும் அக்ஷரங்கள் தெளிவாகவும், தீர்க்கமாகவும் இருக்கவேண்டுமானாலும் இங்கி

கெட்டியாக பேனு முனைக்கு ஓடிவரவேண்டுமென்ருலும் பேனு நுனிவரையில் தண்ணீரில் துவைத்துக்கொள்ளவும். மங்கின அக்ஷரங்களாகவும், மெல்லியதாகவும் எழுதவேண்டுமென்ருல் பேனுவின் கண்வரையில் துவைத்துக்கொண்டால் போதும். உமது எழுத்துவேலை முடிந்த பிற்பாடு பேனுவை உதறி எடுத்து வைத்துக்கொள்ளவும்

## முக்ய எச்சரிக்கை.

எந்தக்காரணத்தைக்கொண்டும் எழுதி முடிந்த பிற்பாடு பேனுவைதுணியினுலாவது, காகிதத்தினுலாவது, அல்லதுகையினு லாவது அல்லது வேறு எந்த வஸ்துக்களாலாவது துடைக்கக் கூடாது. அது தானுகவே ஒரு நிமிஷத்தில் காய்ந்து விடும்.

## இதனுல் வரும் லாபம்.

இந்தக்கைத்தொழிலுக்கு நூற்றுக்கணக்கானமுதல்தேவை யில்லை. சொற்பசிலவில் ஆரம்பித்து நல்ல கீர்த்தியும், தனத்தை யும் சம்பாதிக்கலாம். மூன்று அங்குலம் சுற்றளவுள்ள டப்பாக் கள் தருவித்து அதில் போட்டு மேல்மூடி பதிந்து அதற்கு டுமல் தனது விலாஸம்பதிந்த கடிதம் ஒட்டி டின் ஒன்றுக்கு எட்டணு முதற்கொண்டு விற்கலாம். ஒரு டின் நமக்கு விலையடக்கம் சரா சரி 5 அல்லது 6 பைசாவாகவே இருக்கும். விளம்பரம் தீவிர மாகச் செய்யச்செய்ய தினந்தோரும் நூற்றுக்கணக்கான டப் பாக்கள் வெகு சுளுவாய் விற்பனையாகும். தங்களுடைய விளம் பரத்திற்கு மேல் ஜனங்கள் மனதைக்கவருமாறு அவர்களுக்கு

ஆச்சர்யத்தை உண்டுபண்ணக்கூடிய அடியிற்கண்ட வாக்கியத்தைச்சேர்த்துக்கொள்ளவும். இங்கியின்தொல்லை இன்றுடனே ஒழிந்தது. வெறுந்தண்ணீரும், பேனாவும் எழுதுகிறது கலிகால ஆச்சர்யம் ! !! !!!

## ஜால ரசம்.

## (Wonderite)

விளம்பர முறை:-

தங்கள் கணக்கு வழக்குகளையும், போக்கு வரத்து கடிதங்களையும் பரமரகசியமாக வைத்துக்கொள்ளவிரும்பும் ஆண் பெண் இருதிறத்தினர்களுக்காகவே கண்டுபிடிக்கப்பட்ட அபூர்வ ஜால ரசம். மற்ற விவரங்களுக்கும் எஜெண்டு திட்டங்களுக்கும் அடியிற்கண்ட விலாஸத்திற்கு எழுதித்தெரிந்துக்கொள்ளவும்.

## ஜாலரசம்

## (Wonderite)

**சரக்குப்பட்டோலையும், செய்யும் முறையும்.**

5 ஸெண்டு (இரண்டரையணா) விலையுள்ள ஸிட்ரேட் ஆப் பொடாசாவை (Citrate of Pottassa) ஒரு அவுன்ஸ் சுத்த ஜலமுள்ள கோப்பையில் போடவும். இது உடனே தோற்றாத ஓர்

நீர்த்தன்மையாண ரவவஸ்துவாய்விடும். சிறிதுநேரம் அது நன்ருகக்கரையும் வரையில் காத்திரு. பிற்பாடு எந்த நிறமுள்ள காகிதத்திலும் இதனுல் எழுதலாம். எப்பொழுது எழுதின போதிலும் இதற்குப்பேனுவையே உபயோகிக்கவேண்டும்.

நீங்கள் எழுதினவை கண்ணுக்குப்புலப்படவேண்டுமானுல் சிவக்கக்காய்ந்த ஒரு சூட்டடுப்பிற்கு (Stove) நேராக அந்தக் காகிதத்தையோ அல்லது அந்த லெட்டரையோ பிடித்துக் கொள்ளவும். அப்பொழுது அக்ஷரங்கள் செவ்வனவே புலப்படும்.

முக்யக் குறிப்பு:- நாம் சொல்லிய பிரகாரம் செய்து வியாபாரம் செய்பவர்கள் பெருலாபமடைய மார்க்கமுண்டு. ஆயிரக் கணக்கான தம்பதிகள் தாங்கள் எழுதும் கடிதங்களை தமது பர்த்தாக்களோ அல்லது பத்தினிகளோ மட்டும் பார்க்கவேண்மென்றும் ஏனையோர் பார்க்கக்கூடாதென்றும் வெகு ஆவல்படுகின்றனர். அத்தகைய தம்பதிகளுக்கு இந்த ஜால ரசம் ஓர் வரப்பிரசாதம் என்பது நன்கு பொருந்தும். அன்னுர் இதைவிற்கும் வியாபாரிகள் எவ்வளவு பணம் கேட்டலும் கொடுக்கத்தயாராயிருப்பார்கள் என்பது நமது தீர்க்கத்துணிபு. மற்றும் இவ்வுலகத்தில் அநேகர் தமது பிரைவேட் ரிகார்டுகளையோ, அல்லது ஞாபகக்குறிப்புகளையோ, மந்திராக்ஷரங்களையோ, வைத்யமுறைகளையோ, அல்லது சாஸ்திர ரகசியங்களையோ மர்மமாகவைத்துக் கொள்ளவோ பெரும் ஆவலாக இருக்கின்றனர். அவர்களெல்லோரும் வேண்டிய பொருள் கொடுத்து இதை வாங்கி ஆனந்த

மடைவார்கள். இந்தப் பரமரகசியத்தின் விலையை மதிக்க எவரால் முடியும். இந்தப் புத்தகத்தின் முழுகிரயமும் இந்த ஒரே முறைக்கு ஈடாகுமோ? இதனுல் அடையும் லாபத்தையும் நான் சொல்லாமலே நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

# பாக்கெட் பன்னீர்

# (Kerchief Sprinkle)

## விளம்பர முறை

வசந்தகாலம் வரும் வருமென்று கார்த்துக்கொண்டிருக்கிறீர்களா? ஆனந்தமடையுமந்த விசேஷநாளை எதிர்பார்க்கின்றீர்களா? வச்ய சக்தியை அடைய விரும்புகின்றீர்களா? சகலரும் உம்மைக் கண்டவுடனே சந்தோஷத்துடன் எதிர்கொள்ளப் பிரியப்படுகின்றீர்களா? வெகு நாளாக நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தது நமது பாக்கெட் பன்னீர்தான். பாக்கெட் பன்னீர் உமது கையிலிருந்தால் வேறு கவலையோ, துக்கமோ, விசனமோ ஒன்றுமே கிடையாது. விலை விபரங்களுக்கு நமது விலாசத்திற்கு எழுதவும்.

விலாசம்:—

# பாக்கெட் பன்னீர்

# (Kerchief Sprinkle)

## சரக்குப்பட்டோலேயும், செய்யுர் முறையும்

| | |
|---|---|
| மீனம்பர் (Ambergris) .... | 25 பங்கு |
| கஸ்தூரி (Musk) .... | 12 பங்கு |
| ரோஸ் ஆயில் (Rose oil) .... | 2 பங்கு |
| ஸின்னமன் (கருவாப்பட்டை) Oil of Cinnamon | 3 பங்கு |
| ஆயில் ஆப் வுட் ஆப் ரோட்ஸ் ... Oil of Wood of Rhodes ... | 2 பங்கு |
| ஆயில் ஆப் ஆரஞ்சு ப்ளவர்ஸ் .... Oil of Orange Flowers ... | 9 பங்கு |
| கார்பனேட் ஆப் பொடாஸ் ... Carbonate of Potosh .... | 9 பங்கு |
| 90 டிகிரி ஆல்கோஹால் (மதுசாரம்) ... 90 Alcohol ... | 860 பங்கு |

மேற்கண்ட சரக்கு வகைகளை ஓர் பாத்திரத்தில் ஒன்ருகப் போட்டு 15 நாள் இளக்கு. பிறகு ஜாடிகளில் வைத்துக் கொண்டு கண்ணுடி சீசாக்களைத் தருவித்து அதில் அடைத்து வைத்துக்கொள்ளவும்.

## மற்ரேரு முறை

ஆயில் ஆப் ரோஸ்மெரி அண்டு லெமன் } ஒவ்வொன்றும்
Oil of Rosemary and Lemon } ½ அவுன்ஸ்

பர்கமட் அண்டு லவண்டர் } ஒவ்வொன்றும்
Bergamot and Lavender } ½ அவுன்ஸ்

ஸின்னமன் க்ளவ்ஸ் அண்டு ரோஸ் | 1 க்வார்ட்
Cinnamod Cloves and Rose | 10 துளி

ஆல்கோஹால் } 1 க்வார்ட்
Alcohol

மேற்கண்ட சரக்குகளை ஒன்றுசேர்த்து நன்று இளகும் வரையில் ஒருவாரம் வைத்திருக்கவும், பின்பு முன்போல் எடுத்து பாட்டில்களில் அடக்கம் பண்ணவும்.

## முக்கிய குறிப்பு

நண்பர்களே!

இந்தப் பரிமளத்தின் ரகசியத்தை ஆயிரம் ரூபாய் கொடுத்த போதிலும் எடுத்துச் சொல்லக்கூடியவர் உண்டோ? இன்ப வாழ்வைக்கருதிய ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் இதனால் மனக்குதூகலமடைவதுமன்றி கட்டுப்படாத மனமகிழ்ச்சியும் அடைவார்கள். ஒருவன் எத்தகைய துக்கத்திலாழ்ந்திருந்த போதிலும்சரி, இடுக்கண் நடுவே அகப்பட்டு வாதைப்பட்ட போதும்சரி, நினைக்கொணு நோய்கள்வாய் அகப்பட்டு இடுக்

குண்டு துன்பப்படினும்சரி, இந்தப்பரிமளத்தின் வாசனை மூக்குக் கெட்டியதும் அவ்வானந்த வாசனையில் ஈடுபட்டு துன்பமனைத்தையும் அறவே, அந்தக்ஷணமே மறக்கின்முன். இவ்வஸ்துவை எத்தகைய தொழிலில் அமர்ந்திருப்பவர்களும் இச்சிப்பார்கள். நேற்றைக்கு ஆரம்பித்தவாசனைத்திரவிய வியாபாரிகளெல்லாம் கொள்ளைகொள்ளையாக லாபம் சம்பாதித்து அவர்கள் விளம்பரங்கள் எங்கும் தோன்றிவருவதை நாம் கண்ணுரப் பார்க்கின்றோம். தக்க துணிபும், ஒக்க உத்ஸாகமும், மிக்க வளமும் உடைய ஒருவர் என் இத்தொழிலைச்செய்து ஓர் பெரிய தனவானுக ஆகக்கூடாது என்று நான் கேட்கின்றேன். மேற்சொல்லிய சரக்குகள் கிடைக்கும் கம்பெனிகள் நமது நாட்டில் நூற்றுக்கணக்காக இருந்து வரவில்லையா? விளம்பரம் செய்வதற்கு பத்திரிகைகளில்லையா? வாங்குவதற்கு தக்க சமயங்களாவன, கல்யாணம் ஊர்வலங்கள், திருவிழாக்கள் முதலிய விசேஷகாலங்களேற்படவில்லையா? இதைச்செய்வதற்குரிய சொற்ப மூலதனத்தையுடைய ஆடவமாதர்கள் நம் நாட்டிவில்லையா? மற்றும் இதைக் கற்பிக்க நல்லபிப்பிராயமுள்ள எம்போன்ற எளியதேச ஊழியர்கள் நம் நாட்டிவில்லையா? வாழ்நாளை வீணுளாகக் கழிப்பவர்களுக்கு, இப்பொழுது நான் வெளிபிடும் இந்தத் தெள்ளியநூல் அத்திபூத்ததுபோ[illegible]ற ஓர் அருமையான காட்சி அல்லவா? நமது பிரயாசையினுலும், ஊக்கத்தினுலும், இத்தகைய முறைகளைப்பயின்று, அனுஷ்டித்து, சாதகத்திற்குக் கொண்டுவந்து அதனல் நற்கதி அடைந்திலேன் என்று சொல்பவரும் நம் நாட்டிலுண்டா? தங்கம் விளைந்திடும் நாடு இப்பாரத நாடல்லவா? பொன் விளைந்திடும் நாடு இப்பாரதநாடல்லவா? எதேனும் ஓர் தொழிலைச்செய்து நல்ல சம்பாத்தியமடைந்து வாழ்நாளை

சந்தோஷமாய்க் கழிக்கவேண்டுமென்று பிரியப்படுகின்ற நம் தமிழர்களுக்கு இச்சிறிய புஸ்தகம் நம் சிற்றுயிற்கு உற்ற ஓர் பெருந்துணையல்லவா ?

# பருநஸ்யன்

## Every Body's Pimple Balm

### விளம்பரம் செய்யும் முறை

தங்களுக்கு விலக்ஷணம் பொருந்திய சந்திரபிம்பம்போன்ற முகத்தை அடைய விருப்பமுண்டா ? நமது பருநஸ்யன் முகத்திலுள்ள பருக்களை இருந்த இடம்தெரியாது போக்கிவிடும். முகத்திலுள்ள பரு, படர்களையும், பொரைகளையும் ஒழித்து இலக்குமி நடனம் பொருந்திய வதனத்தை அளிப்பதில் நிகரற்றது. மற்றவிவரங்களுக்கு உடனே எழுதவும்.

நமது விலாசம் :

### பருநஸ்யன்

### சரக்குப்பட்டோலையும்—செய்யும் முறையும்

ஸ்திரீ புருஷர்களுக்கு அடிக்கடி முகத்தில் தோன்றி முக விகாரத்தை உண்டு பண்ணுவது சிகப்பு நிறமுள்ள பருக்களே

யாம். அடியிற்கண்டுள்ள நமது பருநஸ்யனை நாளொன்றுக்கு இரண்டுதரம் அப்பருக்கள் மீது தடவிவந்தால் அப்பருக்களின் முளையற்று உதிர்ந்துவிடும்.

| | |
|---|---|
| ஸல்பர் வாட்டர் (Sulphur Water) | 1 அவுன்ஸ் |
| அஸிடேடட் லிக்கர் ஆப் அமோனியா (Acetated Liquor of Ammonia) | ½ அவுன்ஸ் |
| ஸொல்யூஷன் ஆப் பொடாஸா (Solution of Pottasa) | ½ அவுன்ஸ் |
| ஒயிட் ஒயின் வினிகர் (காடி) (White Wine Vinegar) | 2 அவுன்ஸ் |
| காய்ச்சி வடிகட்டின தண்ணீர் (Distilled water) | 2 அவுன்ஸ் |

மேற்கண்ட சரக்குகளை ஒன்றாகச் சேர்த்து கடற்பஞ்சில் துவைத்து பருக்களின் மேல் ஒத்தவும்.

## முக்கிய எச்சரிக்கை

இந்த மருந்தை முகத்தில் போடுவதற்கு முன்னமே, காய்ச்சி குளிர்ந்த தண்ணீரால் முகத்தைக் கழுவி முரடான ஓர் கைக்குட்டையினால் சிறிது நன்றாய் முகத்தைத் துடைக்கவும்.

## வியாபார விவரம்

இந்தப் பருநஸ்யன் முகத்திலுள்ள சிகப்புப் பருக்களை இருந்த இடம் தெரியாமல் ஓட்டிவிடுவதில் மிகுந்த பிரக்யாதி பெற்றது. நமது யௌவன ஸ்திரீ புருஷர்கள் அநேகர் இப்பருக்

களின் முக விகாரத்தினுல் வருத்தமடைந்து கண்ட மருந்தை முகத்தில் போட்டு முகத்தை அவலக்ஷணம் செய்துகொள்வதோடுகூட அக்கொடிய மருந்துகளின் பலனுக முகத்தில் கொப்புளங்கள் புறப்பட்டு கஷ்டப்படுவது சகஜம். ஸ்வல்ப கிரயத்திற்குக் கிடைக்கின்ற இந்தக் கைமருந்தை அன்னுர் அனைவரும் சந்தோஷமாக வாங்கி பலனடைவார்கள் என்பதில் ஐயமில்லை. ஆங்கிலபாஷைப் பத்திரிகைகளிலும், தேசபாஷைப் பத்திரிகைகளிலும் தக்க விளம்பரம் செய்து மிக்க லாபத்தை யடையலாம். மேல் நாட்டிவிருந்து வருஷந்தோறும் ஆயிரக்கணக்கான ரூபாய் பொருமானதும் மேல் நாட்டாரால் தயார்செய்யப்பட்டதுமான இதுபோன்ற ஔஷதம் நம் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகின்றது. ஸ்வற்ப சிலவில் இந்தத்திவ்விய ஔஷதத்தை நம் நாட்டிலேயே செய்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதோடுகூட இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள் நாடுகளிலும் வியாபாரம் செய்யலாம்.

## பரிமள ஸ்நாநப் பவுடர்

## Victory Bathing Powder

### விளம்பர முறை

தாங்கள் குளிப்பதற்கு சோப் உபயோகிப்பதை விட்டுவிட்டீரா? சோப்பைக்காட்டிலும் பன்மடங்கு வாசனையும், திவ்விய குணம், கன்ளுஉடம்பிற்கு நல்ல இரத்த ஓட்டத்தைக்

கெடுக்கும் கிருமிகளை நாசப்படுத்தவல்ல பரிமள ஸ்நானப் பவுடரை இன்றைக்கே தருவியுங்கள். விலை சரசம்! குணம் உயர்வு!

நமது விலாசம் :—

## பரிமள ஸ்நாநப் பவுடர்

### சரக்குப்பட்டோலையும், செய்யும் முறையும்

| | |
|---|---|
| ஸ்டார்ச் (Starch) | 16 அவுன்ஸ் |
| ஆரிஸ் ரூட் (Orris Root) | 4 அவுன்ஸ் |
| கற்பூரம் (Camphor) | $2\frac{1}{2}$ டி-ராம் |

மேற்கண்டவற்றை வெண்மையாகப் பொடி செய்து பருமையான சிறிய சணநூற்பைகளில் போட்டுக்கட்டவும்.

முக்கிய குறிப்பு :—இப்பரிமள ஸ்நானப்பவுடரின் விற்பனையினுல் எவரும் வேண்டிய தனம் சம்பாதிக்கலாம். இதைச் செய்யும் விதம் எளிது. சாமான்களும் சொற்ப கிரயம். பவுடரும் சீக்கிரமாக விற்பனைபெறும். அநேகமாய் 25 அல்லது 30 ரூபாய் மூலதனமிருந்தால் இந்தத் தொழிலை ஆரம்பித்துவிடலாம் முக்கியமாக கிராமங்களிலும், நகரங்களிலும் தேசபாஷைமூலமாகத் துண்டு பிரசுரங்கள் வெளிப்படுத்தி ஆங்காங்கு பிரகடனம் செய்வதோடு இங்கிலீஷ், தமிழ் முதலிய பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்யவேண்டும்.

# அழகோன்—Beautico

## விளம்பர முறை

தங்கள் குடும்ப வருஷாந்திர சிலவு திட்டத்தைத்தயாரித்து விட்டீரா? வருஷந்தோறும் தங்கள் வீட்டுத் தட்டுமுட்டுச் சாமான்கள் விஷயத்தில் எவ்வளவு பணம் வீணுய்ச் சிலவழிக் கப்படுகின்றது? நாங்கள் அத்தகைய வீண் சிலவுகளைக்குறைக் கும் வழியைக்காட்டுகின்ருேம். நமது "அழகோன்" பழைய தட்டுமுட்டு சாமான்களை புதியனபோன்று தோன்றச்செய்யும் உபயோகித்த பலராலும் புகழப்பெற்றது. மற்ற விவரங்களுக்கு எழுதவும்.

விலாசம்:—

## முதல் முறை

### சரக்குப்பட்டோலையும் செய்யும் முறையும்

| | |
|---|---|
| மெழுகு—Bees Wax | $\frac{1}{2}$ பவுண்டு |
| ஆல்கனட்—Alkanet | $\frac{1}{4}$ அவுன்ஸ் |

இரண்டையும் சிறிய மட்கலத்தில்போட்டு நன்ருகக் கலக் கச்செய். மேற்சொல்லிய மெழுகு தகுந்த நிறத்தை அடையும் வரையில் நன்ருய்க்கலக்கிக்கொடு. பிறகு கீழே இறக்கிவைத்து ஆழிவிரைத்தைலமும் டர்பென்டைன் தைலமும் வகைக்கு

½ ஜில் (ஓர் அளவு) வீதம் சேர்த்துக்கொள்ளவும். முரடான மஸ்லின் துணியினுல் நன்ருக வடிகட்டி எடுத்துவைக்கவும்.

## மற்ெருரு முறை

ஸ்வீட் ஆயில்—Sweet Oil 4 அவுன்ஸ்

காடி—Vinegar 4 அவுன்ஸ்

நன்ருய் மயனமாய்ப் பொடிசெய்த அரபிக்கோந்து—Gum Arabic Powder } 1 அவுன்ஸ்

மேற்கண்ட சரக்குகளை ஒன்ருகக்குலுக்கி ஒரு கந்தைத் துணியினுல் தட்டுமுட்டுசாமான்களுக்குப் பிரயோகித்து வரவும். இது பழைய சாமான்களுக்கு இன்றைக்கே தான் கடையி லிருந்து எடுத்துவந்தது போன்ற ஓர் அபூர்வ பளபளப்பையும் பிரகாசத்தையும் கொடுக்கும்.

## முக்கிய குறிப்பு

இந்த வியாபாரம் தொடங்குமுன் நீங்கள் அடியில் நாம் சொல்வனபோன்று நடக்கவேண்டும். இந்தத் தொழில்மூல மாகவும் மாதம் ஒன்றுக்கு ரூ. 60 முதல் ரூ. 90 வரையிலும் சம்பாதிக்க மார்க்கமுண்டு. பாலிஷ் ஷாப் என்று பெயர்கொண்ட கடையே வைத்துக்கொண்டு ஆங்கு கொண்டுவரப்படும் சாமான் களுக்கு பாலிஷ் கொடுக்கலாம். அல்லது குறிப்பிட்ட நேரங்க ளில் தக்க கனவான்களின் வீடுகளுக்குச்சென்று அவருடன் ஓர் ஒப்பந்தம் பேசி அவர்களுடைய சாமான்களுக்கு பாலிஷ் கொடுத்துவரலாம். சாமான்களின் சைசுக்குத் தகுந்தவாறு பாலிஷ் கூலி கேட்கலாம். முதன் முதலில் லாபத்தை அதிக

மிச்சியாமல் தங்கள் தொழிலைச் செய்யுங்கள். முதன் முதலில் ஜனங்களுக்கு உம்மிடத்தில் பூரண நம்பிக்கை உண்டாகச்செய்ய வேண்டியதுதான் உமது முதற்கடமை.

# தேன் (செயற்கை)—Artificial Honey

## விளபரம் முறை

பத்து அவுன்ஸ் சீசாக்களில் தேனை நிரப்பி நன்றாகக் காரக் செய்து அழகிய லேபிள்கள் ஒட்டி வியாபாரத்திற்கு அனுப்பவும். பாட்டில் 1க்கு சொற்ப கமிஷன்பேரில் உங்கள் உள்ளூர் கடைகளிலேயே ஓர் கன்ட்ராக்டாகப் பேசிக்கொண்டு போட்டு வரலாம். ஜாஸ்தி பணச்செலவில்லாமல் ஆரம்பிக்கக்கூடிய தொழிலில் இது ஒன்று. மற்றும் தெருக்களில் சென்று விற்று வருமாறு நம்பிக்கையுள்ள ஆக்களையும் (Hawkers) ஏற்படுத்தி வியாபாரத்தைப் பெருக்கலாம்.

## (செயற்கை) தேன்

### சரக்குப்பட்டோலையும் - செய்யும் முறையும்

சுத்தமான வெள்ளைச் சர்க்கரை (White Sugar) 8 பவுண்டு

இதை 2 குவார்ட்டு (2 Quarts) தண்ணீரில் 4 நிமிஷம் நன்றாகக் கொதிக்கவை. பிறகு ஒரு பவுண்டு வண்டுத்தேனை (Bees Honey) அதில் சேர்க்கவும். சூடான பதத்திலேயே வடிகட்டவும். தேன் நல்ல வாசனையாக இருக்கவேண்டினால் முக்கியமாய்

ஒரு சொட்டு பெப்பர்மிண்டு (Peppermint oil) ஆயிலும், ஒரு சொட்டு ரோஸ் ஆயிலும் (Rose oil) விட்டுக்கொள்ளவும்.

முக்கிய குறிப்பு:—தேன் மனித வாழ்க்கைக்கு முக்கியமாக வேண்டிய ஓர் பதார்த்தம். இந்தத் தேன் வியாபாரத்தினுல் தக்க லாபமடைய மார்க்கங்கள் பலவுள. பாட்டில்களுக்கு ஒட்டவேண்டிய லேபில்கள் நன்ருகவும், வனப்பைத்தரக்கூடியதாகவும் மனதைக்கவரக்கூடிய சில படங்களை டிரேட் மார்க்காக (**Trade Mark**) க்கொண்டுள்ளவேண்டும். முதன் முதலில் அதிக லாபத்திற்கு ஆசைப்படாமல் தக்க கமிஷனைக்கொடுத்து வியாபார முற்போக்கைக் கவனிக்கவேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு உம் சரக்குகள் நாட்டில் பரவுகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு உங்களுடைய தொழில் பிரசித்தி அடையும். அதன் பலனுக லாபம் தானுகவே பெருகும். இந்தத்தொழிலை ரூபாய் 5 முதல் ரூபாய் 1000 வரையில் கைமுதல் வைத்துக்கொண்டு யாதொருவித நஷ்டபயம் அன்னியில் ஆரம்பிக்கலாம். நோயாளிகளுக்குச் சிகிச்சைக்கு வேண்டியது தேன். விசேஷமாக அநேக மருந்துகள் அனுபானத்திற்கு வேண்டியது தேன். திருவிழாக்களிலும், கல்யாண காலங்களிலும் பஞ்சாமிர்தம் கலப்பதற்கு வேண்டுவது தேன். அநேக இடங்களில் ஸ்வாமிகளுக்கு அபிஷேகம் செய்வதற்குத் தேவையானது தேன். சர்க்கரைப் பொங்கல் முதலிய தின்பண்டங்களுக்கு நல்ல இனிப்பையும், மணத்தையும் கொடுக்குமாறு கலப்பதும் தேன். இத்தகைய அருமையான வஸ்துவின் மர்மத்தை இதுவரையில் நீர் அறிந்திருப்பீரா? இந்த ரகசியத்தை அறிந்தவர்கள் இன்றைக்கும் நாளைக்கும் நல்ல வரும்படி அடைந்து வருகின்றனர். ஒவ்வொரு

வீட்டிற்கும் முக்கியதேவை தேன். ஏனெனில் அது விசேஷ மாக நம் குடும்பங்களில் அடிக்கடி உபயோகிக்கப்பட்டுவரப் படுகிறது.

## 50 ரூபாய் கைமுதல் வைத்து ஆரம்பிக்க ஓர்தொழில்

# If I had Rs. 50

## உயர்ந்த டூத் பாலிஷ்

டூத் பாலிஷ் செய்யும் முறை:— இந்த சாமான் கற்கண்டு போல் நமது நாட்டில் விலையாகும். ஏனெனில் பொழுது விடிந்ததும் பாலர் முதல் விருத்தர் வரையில் ஆண் பெண் அனைவரும் பல் தேய்ப்பது நமது கர்மங்களின் ஓர் முக்கிய அனுஷ்டானம். மற்றும் தூரதேசப்பிரயாணம் செய்பவர்களுக்கும் இது ஓர் முக்கிய தேவை. நமது சரீரத்தில் எந்த அவயவங்களுக்கு நோய் அணுகினும் சுலபமாகச் சிகிச்சை செய்யலாம். ஆனால், வாய்க்குள் உள்ள பற்களுக்கோ, அதன் ஈறுகளுக்கோ, அல்லது வேர்களுக்கோ ஓர்வித நோய் அல்லது தொந்திரவு ஏற்படுங்கால் அதனால் ஏற்படும் சங்கடம் பொருக்கமுடியாது ஏனெனில் மற்ற அவயவங்களுக்கெல்லாம் தெய்வ சிருஷ்டியால் ஏற்படுத்தியுள்ள காற்று அவ்வவ்விடத்தில் பிரவேசித்து அதனை ஆற்றுவிக்கவும், காயவைக்கவும் உதவுகின்றது. உண்ணும்பொழுதும் பேசும்பொழுதும் தவிர மற்றைய நேரங்களில் சதா மூடியிருக்கப்பட்டதானது நமது வாய். ஆகையினால்தான் பல்லை அடிக்கடி தொடக்கூடாதென்றும், தொட்டால் கையை அலம்பவேண்டுமென்றும், அதிக நேரம் பல்களுக்கிடையில் எந்தத்தின்பண்டங்

களையும் ஊறவைக்கக்கூடாதென்றும் நமது வைத்ய சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

பற்களைப் படுக்கையைவிட்டெழுந்ததும் துப்புறவாக சுடு தண்ணீரிலோ அல்லது சுத்த ஜலத்திலோ இந்த டூத் பாலிஷால் நன்ருகத் தேய்த்துவரவேண்டும். மற்றும் பற்களில் ஏதாவது தொந்திரவு ஏற்படுமேயாகில் முகம் சுணுக்குறுகின்றது. சிலருக்குப் பல் வேர்கள், ஈறுகள் தடிப்புண்டு அதினின்றும் இரத்தம் சதா பெருகிக்கொண்டு வருகின்றது சிலருக்குப் பல் ஈறல்கள் வீங்கிப் புடைக்கின்றது. பல் அரணை என்று சொல்லும் தடிப் புண்கள் ஏற்பட்டு பிரியப்பட்ட பண்டங்களை உண்ணமுடியாமல் தடுக்கின்றது. மற்றும் சிலருக்கு பற்களுக்கு இடை சந்து வீழ்ந்து பற்கள் அசைவு கொடுக்க ஆரம்பிக்கின்றன. பொதுவாக அநேகருக்கு எப்பொழுதும் பல் ஜிலுஜிலுப்பும், கூச்சலும் உண்டாகி இஷ்டமுள்ள பதார்த்தங்களைச் சாப்பிடாதபடி தடுக்கின்றது. நமது டூத் பாலிஷ் விற்பனைக்கென்றே நாம் எடுத்துச் சொல்கிருேம். இந்த சொல்ப முதலினுல் நாம் நல்ல வருமானம் அடைய வழியுண்டு. 50 ரூபாய் முதலாக வைத்துக்கொண்டு தொழில் செய்தால் மாதந்தோறும் இதன்மூலமாய் 50 ரூபாய் சம்பாதிக்க முடியும்.

# டூத் பாலிஷ்

## சாக்குப்பட்டோலேயும் செய்யும் முறையும்

| | | |
|---|---|---|
| க்ளோரைட் ஆப் லைம்–Chloride of Lime | 2 | அவுன்ஸ் |
| ப்ரெஸிபிடேடட் சாக்–Precipitated Chalk | 30 | ஷை |

பெருவியன் பட்டைத்தூள்–Pulverised Peruvian Bark 1 அவுன்ஸ்

ரோஸ் அத்தர்–Otts of Rose 7, 8 துளிகள்

மேற்சொல்லிய சரக்குகளையெல்லாம் ஒன்ருகச் சேர்மானமாக்கி சிறிய தகர டப்பாக்களிலாவது, பேப்பர் கவர்களிலாவது போட்டு லேபில் ஒட்டவும். அடியிற்கண்ட வாக்கியங்களுள்ள லேபில்கள் ஒட்டவும் :—

---

## நவீன எலக்டிரிக் டூத் பாலிஷ்

..........கம்பெனியாரால் தயாரிக்கப்பட்டது. பற்களைச் சுத்திசெய்வதிலும், பற்களுக்கு அழகு கொடுப்பதிலும்நிகரற்றது இந்த டூத் பாலிஷின் அபூர்வ குணத்தினுல் பல் சொத்தை, பல் பூச்சி, பல் ஆட்டம், பல் வீக்கம், பல் கூச்சல், பல்லில் இரத்தம் வருதல், பல்லில் ஈர் கட்டுவது முதலிய கொடிய நோய்களெல்லாம் சொல்லாது பறந்தோடி விடும். டப்பா விலை ரூ. 0–4–0.

---

☞ இது போன்ற விளம்பரங்களைத் தயாரித்து துண்டு பிரசுர மூலமாகப்பரவச்செய்து வியாபார விருத்தி செய்யலாம். மற்றும் டிராவெலிங் ஏஜெண்டுகள் ஏற்படுத்தி அவர்கள் மூலமாகத் தினந் தோறும் நூற்றுக்கணக்கான ஆர்டர்கள் பெறலாம்.

# அர்வ சம்பாத்ய முறைகள்

“வெல்த்” என்ற ஆங்கில பத்திரிகையினின்றும் மொழி பெயர்க்கப்பட்டது. பத்திரிகையின் ஆசிரியர் இப்புத்தகத்தின் ஆசிரியரேயாம். இது ஓர் பிரபலப் பத்திரிகை.

# ஜெம் பிஸ்கட்ஸ்

## சரக்குப்பட்டோலையும் செய்யும் முறையும்

4 அவுன்ஸ் புதிய வெண்ணெயோடு 1 பவுண்டு மாவுசேர்த்து ஒரு பின்ட் (1 Pint) பால் கூடவிட்டு நன்ருய் ஒன்ருகச் சேர் மானமாகும்படி பிசையவேண்டும். நன்ருய்ப் பிசைந்த மாவை சிறு துண்டுகளாகச் செய்துகொள். காய்ந்த மாவு நிரம்பிய ஒரு டின் தட்டில் வைத்து இளந்தணலுக்கு மேலாக வைத்து வரட்டவும்.

முக்கிய குறிப்பு :-நமது நாட்டில் அன்னிய நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட பிஸ்கத் எவ்வளவு தீவிரமாகச் செலவாகின்றது என்பதை நீங்களே அறிவீர்கள். அப்படியிருக்க நீங்கள் என் இந்தத் தொழிலைச்செய்து உயர்ந்த லாபத்தை அடைய முடியாது?

# ஸ்வீட் பிஸ்கட்ஸ்—Sweet Biscuits

செய்யும் முறை :–4 அவுன்ஸ் உருக்கின வெண்ணெயில் ஒரு பவுண்டு மாவும் 4 அவுன்ஸ் சர்க்கரையும் அது சேர்மானமாவதற்கு வேண்டிய பாலும் சேர்த்து நன்ருய்ப் பிசைந்து மாவு பக்குவத்திற்குக் கொண்டுவா. சச்சதுர துண்டுகளாக நறுக்கு. மேலே சொல்லிய பிரகாரம் இளந்தணலில் சுட்டு இறக்கிக் கொள்ளவும்.

# ரோஸ் பேஸ் பவுடர்

# Rose Face Powder

செய்யும் முறை :—ஆரோருட் பசை 8 அவுன்ஸ்

கார்மைன்ஸ் (Carmines) 5 கிரெயின்

ரோஸ் ஆயில் (Rose Oil) 16 துளி

சந்தணத்தைலம் (Sandalwood oil) 4 துளி

மேற்கண்ட சாமான்களை நன்றாகக் கலந்து காற்றுப்போகாமல் தகரடப்பாக்களிலோ அல்லது சீசாக்களிலோ வைத்துக்கொண்டு வியாபாரம் ஆரம்பிக்கவும். இந்தப் பவுடர் உபயோகித்த யாவராலும் போற்றப்படுகின்றது. முகத்திற்குத் தெளிவும், அழகும், வசீகாமும் கொடுக்கவல்லது.

# தலை மயிர் (மீசை) கறுக்கும் தைலம்

# Pomade for the Hair & Moustache

சரக்கு ஜாப்தாவும் செய்யும் முறையும்

இளந்தணலின் பேரில் ஓர் பாத்திரத்தை வைத்து அந்தப் பாத்திரத்திற்குள் ஒரு அவுன்ஸ் வெள்ளை மெழுகைப்போடவும். அதில் 8 அவுன்ஸ் பாதாம் எண்ணையை விட்டு நன்றாகக்கலக்கிக் கொடு. பிறகு கீழே இறக்கிவைத்து ஆறின பிற்பாடு 1 டிராம் நிரோலி ஆயிலும் (Oil of Neroli), ½ டிராம் ரோஸ் அத்தரும் (Ottoe of Rose) விட்டு கலக்கிக்கொள்ளவும்.

# பிசைந்த மாவை புளிக்காமல் செய்யும் மர்மம்

# To keep flour paste from Souring

முறை:—பிசைந்த மாவை உடனே உபயோகிக்க முடியாமற் போனாலும், வேறு தடைகள் ஏற்பட்டாலும் அம்மாவைப் புளிக்காது செய்வதற்கு அடியிற்கண்ட உபாயத்தைச் செய்து கொள்ளலாம். மாவு பிசையும் காலத்தில் ஒரு பவுண்டு மாவுக்குத் தண்ணீர் கரைத்த ½ அவுன்ஸ் படிக்காரத்தைச் சேர்த்து மாவைப் பிசைந்து பக்குவத்திற்குக் கொண்டுவரவும். இந்தப் பிரகாரம் செய்த மாப்பசையானது ஒரு வாரம் வரை யாதொரு கெடுதியு மடையாமல், புளித்த வாசனையுமடிக்காமல், அன்றைக்குச்செய்த புதிய மாப்பசைபோலவேயிருக்கும்.

# ஆலின் பார் தி ஹேர்

# Oline for the Hair

| | | |
|---|---|---|
| முறை:—ஆமணக்கெண்ணெய் | 2 | அவுன்ஸ் |
| வாதுமை எண்ணெய் | 2 | ,, |
| வெள்ளை மெழுகு | ¾ | ,, |

இளம் சூட்டில் மெழுகை உருக்கிக்கொண்டு இந்த எண்ணெய்களைச்சேர்த்துக்கொள்ளவும். பிறகு அணலைவிட்டுக்கீழே இறக்கி வைத்து ஆறின பிற்பாடு ½ டிராம் நிரோலி ஆயில் (Neroli oil) விட்டுக்கொள்ளவும்.

## ஸூதிங் கரீம்—Soothing Cream

| | |
|---|---|
| ஸாப்ட் ஓயிட் பாரபின் (Soft White Paraffin) | ½ அவுன்ஸ் |
| ஆல்மாண்டு ஆயில் (Almond oil) | 1 டிராம் |
| நுண்மையான ஸ்டார்ச் பவுடர் (Finest Starch Powder) | 4 டிராம் |
| சந்தனுதித்தைலம் (Sandal oil) | ½ டிராம் |
| கிளிஸரைன் (Glycerine) | ½ டிராம் |
| எலுமிச்சம்புல் ஆயில் (Lemon Grass oil) | 10 துளி |

முறை :—பாரபின் (Paraffin) மெழுகை முதல் முதலில் உருக்கிக்கொண்டு அத்துடன் வாதாம் எண்ணே சேர்த்துக்கொள்ளவும். உடனே அடுப்பினின்றும் இறக்கிவைத்து மற்றைய சாமான்களைச் சேர்த்து நன்ருகக் குழப்பிக்கொள்ளவும். இது க்ஷவரம் பண்ணிக்கொண்டவுடன் முகத்தில் தேய்த்துக்கொள்ள வேண்டியது. கண்ணுக்கு மிகுந்த குளிர்ச்சியும், முக தேஜஸ்ஸையும் கொடுப்பதில் பெயர்போனது.

**ஆதாய விவரம்** :—சிறு சீசாக்களில் இதைப்போட்டு மூடி மேலே அழகிய லேபில்கள் ஒட்டி புட்டி ஒன்றுக்கு முக்கால் அல்லது ஒரு ரூபாய் வரையில் விற்கலாம். இதைச் செய்வதற்குரிய வஸ்துக்கள் யாவும் மிக எளிதாய்க் கிடைக்கக்கூடியவை. செலவும் அதிகமில்லை.

இந்தத்தலைப்பின் கீழுள்ள ஒவ்வொரு சாமான்களும் தக்க முறைப்பிரகாரம் செய்து பிரசுரப்படுத்தப்பட்டால் மாதம் 1க்கு நாம் போட்ட புள்ளிக்குமேல் ஆயிரக்கணக்காக சம்பாதிக்கலாம்.

ஒவ்வொரு சாமான்களையும் எடுத்துரைக்கலாமென்றால் இந்தச் சிறிய புஸ்தகத்தில் சாத்தியப்படக்கூடியதல்ல.

## ஆபீஸ் கோந்து—Office Gum

| | |
|---|---|
| டெக்ஸ்ட்ரெயின் (Dextrine) | 10 அவுன்ஸ் |
| சுத்தஜலம் (Water) | ½ குவார்ட் |

இதைத் தண்ணீரில் நன்றாகக் கலக்கிக்கொள்ளவும். பிறகு ½ அவுன்ஸ் அஸெடிக் ஆஸிட் (Acetic Acid) விடவும். இத்துடன் சில துளிகள் லவங்கத்தைலமும் (Cloves oil) விடவும். கம்பீரமானதும், தெளிவானதும் நல்ல குணங்களுடைய நீடித்து உழைக்கக்கூடிய சிலாக்கியமான கோந்து.

ஆதாய விபரம்:-முன் சொல்லியது போல் பாட்டில்கள் தருவித்து அடக்கம் செய்து அழகிய லேபிள்கள் ஒட்டி தீவிரமான விளம்பரங்கள் செய்து ஏஜெண்டுகள் ஏற்படுத்தி பிரகடனம் செய்யலாம். எத்தகைய ஆபீசர்களுக்கும், வியாபாரிகளுக்கும் இது ஓர் முக்கிய தேவை.

| | |
|---|---|
| சுத்தமான இலுப்பெண்ணெய் (Olive oil) | 1 அவுன்ஸ் |
| ஸ்பிரிட் ஆப் ரோஸ் மேரி (Sprit of Rose Mary) | 1 ,, |
| டின்சர் ஆப் காந்தரைட்ஸ் (Tinchure of Cantharides) | 4 டிராம் |
| யூடிகோலன் —Eudecologne | ,, |

உயர்த்தியான வாசனை லவண்டர் தைலம்—
Superior Lavender Oil 1 டிராம்

இவைகளை ஒன்ருகச் சேர்த்து ஒரு சீசாவில் வைத்துக்கொள்ளவும். கொஞ்சம் கையிலெடுத்து மயிர்களில் நன்ருய்த்தேய்க்கவும். இது தலைமயிர்களுக்குரிய வியாதிகள் அனைத்தையும் போக்குவதோடு கூட மயிரையும் வளர்க்கச்செய்யும். மயிருக்கு அபூர்வ அழகையும் கொடுக்கும். தற்சமயம் வியாபாரம் செய்யவும் இது நல்ல லாபத்தைத்தரும்.

## ரோஸ் டீ—Rose Tea

ஆயில் ரோஸ் ஜிரானியம் காலிக் (Oil Rose Geranium Galic) 1 டிராம்

டீ டஸ்ட் (Tea Dust) 10 பவுண்டு

டீயுடன் எண்ணெயை நன்ருகச் சேர்த்து 14 நாள் வரையில் வைத்திரு. பிறகு எடுத்து உபயோகித்துக்கொள்ளவும். இந்த 14 நாளும் காற்றுப்போகாமல் மேல் மூடியுடைய ஒரு சீசாவிலோ அல்லது கண்ணுடிப் பாத்திரத்திலோ அல்லது சட்டியிலாவது வைத்துக்கொள்ளவும்

முக்கிய குறிப்பு:—தற்சமயம் நமது நாட்டில் இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்ற முறைகளைக் காட்டிலும் இது மிகவும் லாபகரமான முறை. சாமான்களும் சொற்பம். குணம் சிலாக்கியம்.

# இரேசிங் பவுடர்

ஆலம் (Alum)
அம்பர் (Amber)
சால்ட் பீடர் (Salt Peter)
சல்பர் (Sulphur)

மேற்கண்ட சரக்குகளை எல்லாம் ஓர் நிறையாக எடுத்து ஒன்றாக கலந்துகொண்டு காற்று போகவிடாமல் ஒரு ஜாடியில் அடைத்து வைக்கவும். இங்கியால் எழுதப்பட்டுள்ள அல்லது அச்சடிக்கப் பட்டுள்ள எந்த எழுத்துகளையோ அழிக்கவேண்டுமென்றால் இந்தப் பவுடரில் கொஞ்சம் எடுத்து அந்த அக்ஷரங்களிலோ அல்லது வாக்கியங்களிலோ போட்டு, ஓர் வெள்ளைச்சணநூல் புடவைக்கந்தையினால் அதைத்தேய்க்கவும். உடனே அந்த அக்ஷரங்களோ அல்லது மைக்கிருக்கல்களோ மறைந்துவிடும்

வருமான ஆராய்ச்சி :-இதுபரியந்தம் இத்தகைய அபூர்வ ரஹஸ்யத்தை நீங்கள் தெரிந்துகொள்ளாமலிருந்தீரல்லவா? இந்த ரஹஸ்யத்தினுடைய விலைமட்டுக்கும் இந்தப்புஸ்தக கிரயத்தைப்போன்ற 50 மடங்கு கிரயம் கோடுத்தபோதிலும் சுலபமாய்க் கிடைக்கக்கூடியதல்ல.

## மகாசர் ஆயில்—Macassar Oil

| | |
|---|---|
| இலுப்ப எண்ணெய்—Olive oil | 1 பவுண்டு |
| ஆயில் ஆப் அரிகனம்—Oil of Origanum | 1 டிராம் |

ஆயில் ஆப் ரோஸ்மரி—Oil of Rose Mary $\frac{1}{3}$ டிராம்

இதுகளையெல்லாம் சேர்த்து அடைப்புள்ள சீசாவில் போட்டு உபயோகிக்கவும்.

## நரம்புசுளுக்குத் தைலம்
## Sprain Embrocation

குறிப்பு :-இந்த முறை கைதேர்ந்த அறிவாளர்களால் கையாடப்பட்டுவந்தது. வியாபாரத்திற்கு எற்றது. குணத்திலும் எத்தகைய சுளுக்கு உபத்திரவங்களையும் நீக்கவல்லது. சீசா 1க்கு ஒரு ரூபாய் விதம் விலை வைத்து வியாபாரம் செய்தபோதிலும் கூட குறைந்தது மாதம் ஒன்றுக்கு ரூ. 80 முதல் ரூ. 100 வரை லாபம் கிடைக்கும்.

சரக்கு ஜாப்தாவும்—செய்யும் முறையும்

| | |
|---|---|
| கற்பூரம்....Camphor | 22 கிரெயின் |
| கரைத்த அஸெடிக் ஆஸிட்...Diluted Acetic Acid | $2\frac{1}{2}$ அவுன்ஸ் |
| மிதிலேடட் ஸ்பிரிட்...Methylated Sprit | 6 டிராம் |
| டர்பெண்டைன்...Turpentine | 6 அவுன்ஸ் |

நன்றாக எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்மானம் செய்து அத்துடன் கால் பங்கு கோழிமுட்டையின் மஞ்சட்கருவும் சேர்த்து மத்தித்து வைத்துக்கொள்ளவும்.

## ஈக்கூடு—Fly Killer

சரக்குப்பட்டோலேயும் செய்யும் முறையும்

| | |
|---|---|
| வேகவைத்த சணல்விதை எண்ணெய்...Boiled Linseed Oil | 6 அவுன்ஸ். |
| தஸ்கோந்து....Gum Thus | 2 ,, |
| விளக்கெண்ணெய்...Castor oil | 2 ,, |

இவைகளை ஒன்ருகச் சேர்த்து பாட்டில்களில் அடைத்து விற்பனை செய்யவும். உலகத்தில் ஈக்களினுடைய தொந்தரவு மிகவும் ஜாஸ்தியாய்க்கொண்டுவருகிறதினுல் அநேக வியாதிகளை பரவச்செய்வதற்கு ஈக்களே காரணம் என்று வைத்திய நிபுணர்கள் சொல்லி வருகின்ருர்கள். நமது சாஸ்திர முறைப்படி இலேயில் சாப்பாடு பரமாரப்பட்டால் அவைகளை ஈ மொய்க்கவொட்டாது ஜல்தியாக உட்கார்ந்து புசிக்கவேண்டுமென்ற விதிகளும் உண்டு.

முக்கிய குறிப்பு :—மேற்கண்ட மருந்தை சிறிது அணலில் காட்டிப் பிறகு ஒரு துணியியோ அல்லது குச்சியிலோ சூடுபதத்திலே தடவிவரவேண்டும். ஒருகால் மேற்படி கொழும்பானது இருக ஆரம்பித்தால் அல்லது இருகுவதற்குள்ள அறிகுறிகள் காணப்பட்டாலும் விளக்கெண்ணையைக்கூட கொஞ்சம் சேர்த்துக்கொள்ளவும்.

## டின் மேல் எழுதுவது

யாதொரு வேலேயும் செய்யத் தெரியாமலிருக்கிறவர்களுக்கும் கைமுதல் வைத்துக்கொண்டு வியாபாரம் செய்ய இயலாத

பேர்களுக்கும் அன்றாடம் சம்பாதித்து ஜீவனம் செய்யவேண்டியவர்களுக்கும். பிறகு ஜாஸ்தி சரீர பிரயாசை, பணச்செலவில்லாமல் சுக ஜீவனம் செய்ய விரும்புவோர்களுக்கும் இது ஓர் தக்க சம்பாத்யமுறை. இதர வேலையிலிருப்பவர்களும் கூட ஓய்வு நேரங்களிலும் சாவகாச காலங்களிலும் இதைச்செய்து தக்க வருமானமடையலாம். சுமார் 30 ரூபாய் முதற்கொண்டு 50 ரூபாய்வரை மாதந்தோறும் சம்பாதிக்க முடியும். வேண்டிய ஆயுதங்களாவன:- அடியிற்கண்ட சொல்யூஷனும் ஓர் ப்ருஷ்ஷும். (Brush)

| | |
|---|---|
| வெர்டிகிரிஸ்....Verdigris 2 பங்கு | 2 பங்கு |
| சால் அமோனியா...Sal Aumoniac | 2 ,, |
| லாம்ப்ளாக்...Lamp Block | 1 ,, |
| தண்ணீர்...Water | 20 ,, |

மேற்கண்ட சாமான்களை எல்லாம் ஒரு பாட்டிலில் போட்டு நன்றாகக் குலுக்கிவைத்து உபயோகிக்கவும்.

முக்கிய குறிப்பு:-இந்த மிக்ஸர் (Mixture) விஷமுள்ளது. பத்திரமாகவும் ஜாக்கிரதையாகவும் உபயோகப்படுத்தவும்.

## குடும்பங்களுக்கு சோப்

நமது அனுபவபலனாக தெரிந்துகொண்டது யாதெனில் நமது குடும்பத்தில் மாதந்தோறும் ஒவ்வொருவரும் குறைந்தது இரண்டணா விலையுள்ள சோப்பு உபயோகப்படுத்தி வருகிறோம். பெண்டிரும் ஆடவரும் குளிப்பதற்கு அன்றாடம் சோப் உபயோகப்படுத்த ஆரம்பித்துவிட்டனர். அதன் நிமித்தமாக இந்தத் தேசமார்க்கட்டில் தீக்குணங்களுள்ள சோப்புகளும் அதிக ஆடம்பரத்துடன் வெளி வந்திருக்கின்றன. கீழே விவரித்துக்கூறப்போகிற இந்த முறையானது நமது சரீர இயல்பிற்கும் தேக வனப்பிற்கும், முக வசீகரத்திற்கும் மிகுந்த கியாதிபெற்று அநேக காலமாக ஓர் மறைபொருளாக இருந்துவந்தது.

## வியாபாரம் வருமான ஆராய்ச்சி

இந்த சோப்பு செய்து தங்கள் குடும்பங்களுக்கு உபயோகித்துக்கொள்ளலாம். இன்னும் முக்கியமாய் வியாபாரம் செய்வதற்கும் ஓர் சிறந்த சரக்கு. நமது நாட்டில் புழங்கிவரும் சோப் சைஸில் செய்யப்பட்டு அதேமாதிரியாகக் குறைந்த விலைக்கு விற்கப்பட்டுவந்தால் இதன்மூலமாகத் தக்க பிரையாசை எடுத்துக்கொள்ளக்கூடிய ஒரு கனவான் மாதம் ஒன்றுக்கு ரூபாய் நூறல்ல ஆயிரமல்ல—அவன் தன் வாழ்நாளைழக்கே வேண்டிய தனத்தை இரண்டு மூன்று வருடத்தில் சேர்த்துவிடலாம்.

## சரக்குப்பட்டோலையும் செய்யும் முறையும்

ஓர் இருப்புசட்டியில் 4 அவுன்ஸ் சுத்தமான தேங்காய் எண்ணெய் எடுத்துக்கொள். எண்ணெய் கலக்கமாக இருந்தால் ஒரு பிளாட்டிங் (Blotting) பேபரால் வடிகட்டி எடுத்துக்கொள்ளவும். எண்ணெய் சட்டியை அடுப்பில்வைத்து எண்ணெய் சிறிது காய்ந்ததும் பத்திரமாக 4 அவுன்ஸ் காஸ்டிக் பொடாஷ் (Caustic Potash) சொல்யூஷனை விட்டுக்கலக்கவும். அல்வா பக்குவத்திற்கு வந்ததும் தங்களுக்கு தேவையான வாசனையோ கலரோ ஊற்றிக்கொண்டு பிறகு இறக்கிவைத்து ஆற்றி சிறு கட்டிகளாக விற்பனைக்கு ஏற்றவாறு உருப்படுத்திக் கொள்ளவும்.

# கான்வாஸிங் (ஏஜண்டு) தொழில்

தற்காலம் நாடெங்கும் வியாபாரப்பெருக்கும், தொழில் முன்னேற்ற உணர்ச்சியும் நாட்டில் தீவிரமாக ஜனங்களின் மனதைப்பற்றிவருகின்றது.

இந்தத் தருவாயில் கான்வாஸிங் தொழில் ஓர் லாபகரமான தொழிலேயாம். முதலாளிக்கோ அல்லது இறக்குமதி வியாபாரிக்கோ அல்லது ஏற்றுமதி வியாபாரிக்கோ அல்லது கம்பெனிக்கோ பத்திரிகைக்கோ, எத்தகைய தொழிலுக்கும் கான்வாஸர்

ஓர் முக்கிய தேவை. இன்ஷியூரென்ஸ் கம்பெனிகளென்ன, கோ ஆபரேடிவ் பாங்கிகளென்ன, உள்நாட்டு வெளிநாட்டு வியாபாரிகளென்ன இவர்கள் மூலமாக ஓர் கான்வாஸர் மாதந்தோறும் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் ஸம்பாதிக்கலாம். வர்த்தமானபபத்திரிகைகளுக்கு விளம்பரமும் சந்தாதாரர்களும் சேர்த்துக்கொடுப்பது மிகவும் சுலபமானதொழில். குறைந்தது மாதம் 50 ரூபாய்க்குக்குறைனாத கமிஷன் கட்டாயம் கிடைக்கும். தற்காலத்தில் ஆர்டர் சேகரிப்போர்களுக்கு தற்சமயம் நல்ல அருமையான சமயம் என்பதில் ஐயமில்லை. யாதெளில் ஆங்காங்கு புதிய வர்த்தமானப் பத்திரிகைகள் ஆங்காங்கு தோன்றியிருக்கின்றன. பிரையாசைக்குத் தகுந்தகூலி என்பது போல் 5ாம் எவ்வளவுக்கெவ்வளவு சிரமத்துடன் இதில் உழைக்கிறோமோ அவ்வளவிற்கு குறையாமல் சுகமும் லாபமும் பெறலாம். சுகமான ஜீவனம் செய்யும்பொருட்டு நம்மை சிருஷ்டித்த கடவுள் நமக்கென்றே அநேக திட்டங்களைத் தயாரித்துள்ளார். தமது அறியாமையினாலும் சோம்பேரித்தனத்தினாலுமே, மனிதன் இவ்வுலகின்கண்ணுள்ள பல பிணிகள் முதலிய தீச்செயல்கள்வாய்ப்பட்டு அந்தகாரத்தில் வீழ்கிறான்

## ஸாந்தால் எஸ்சென்ஸ்

இத்தொழில் செய்வதற்கு பத்து ரூபாய் சரக்குக்குக் கைமுதலாகவும் ரூ. 10 விளம்பர முதலாகவும் வைத்துக்கொண்டு ஆரம்பித்தால் போதும். பொதுவாக நம் தேசத்திலுள்ள எஸ்சென்ஸ்கள் சாராயதிராவகத்தில் ஒட்டோவும் இன்னும் பற்பல வாசனைபொருந்திய எண்ணெய்களும் சேர்த்து சாராயத்துடன் கலிக்கிச் செய்யப்படுகின்றன. அடியிற்கண்டவாறு சாந்தால் எஸ்சேன்ஸ் செய்ய ஆரம்பிக்கவும்:—

ஸ்பிரிட் ஆப் ஒயின் (Spirit of Wine) 1 பிண்டு (Pint)
ஸாந்தால ஒட்டோ (Ottoe Santal) 1 அவுன்ஸ்

யாதொரு தூசி அழுக்கு உள்ளே நுழையாதபடி ஒன்று சேர்த்துக்கொள்ளவும். பிற்பாடு அடைப்புள்ளதும் காற்றுப் போகாமலிருக்கின்ற ஒரு அவுன்ஸ் சீசாக்களில் ஊற்றிவைத்துக்

கொள்ளவும். சீசா ஒன்றிற்கு எட்டணு முதற்கொண்டு விற்கலாம், சிறிய பிரயாசை எடுத்துக்கொண்டு இத்தொழிலைச் செய்வீராகில் கைநிறைய பணம்சம்பாதிக்க மார்க்கமுண்டு.

## பிரஞ்சு பாலிஷ்

பாலிஷ்களுக்கெல்லாம் மிகவும் பேர்போனது பிரஞ்சு பாலிஷ். ஏனெனில் தட்டுமுட்டுச்சாமான்களில் வனப்பையும் அழகிய தோற்றத்தையும் பாரிஸ் (Paris) முதலிய பிரஞ்சு இலாகாக்களில்தான் பார்க்கவேண்டும். இந்த பாரிஸ் நகரைத் தான் அநேகர் தேவேந்திரப் பட்டணமென்கின்றனர். ஏனென்ருல் அப்பிராந்தியங்களில் லக்ஷ்மி ஸந்ததமும் வாசம்செய்கிருள் போன்றும். பல் துலக்கும் ப்ருஷ் முதற்கொண்டு காலில்மாட்டும் ஸ்லிப்பர்வரை அது பிரஞ்சு சாமானுக இருக்கும்பக்ஷத்தில் அது யாவர் மனதையும் கவரக்கூடியாதாகவே இருக்கிறது.

பாலிஷானது நமது தட்டுமுட்டுசாமான்களுக்கும் மேஜை நாற்காலி முதலியவைகளுக்கும் பளபளப்பையும் மனதைக்கவரும்படியான ஓர் லக்ஷணத்தையும் கொடுக்கக்கூடியது. குறைந்த சார்ஜ்ஜாக எடுத்துக்கொண்டாலும் இந்த பிரஞ்சு பாலிஷ் செய்யு முறையை மட்டும் இரண்டு ரூபாய்க்குக் குறையாமலே வைக்கலாம். ஆனல் 12 அணு கிரையம் வைத்துள்ள இப்புஸ்தகத்திலோ மாதம் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் ஸம்பாதிக்க நம்மைத் தயார்ப்படுத்தக்கூடிய ஒன்றல்ல, இரண்டல்ல அநேக டஜன்களான முறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

### சரக்கு ஜாப்தாவும் செய்யும் முறையும்

| | |
|---|---|
| பென்ஸாயின்கோந்து(Gum Benzoin) | 3 அவுன்ஸ் |
| ஆரஞ்ஷெல்லக்(Orange Shellac) | 2 பவுண்டு |
| மிதிலேடட் ஸ்பிரிட்(Metbylated Spirit) | 5½ பிண்டு(Pints) |

பென்ஸாயின்கோந்தை ஒருபவுண்டுஸ்பிரிட்டில்நன்ருய்இளக்கு. பாக்கியுள்ளஸ்பிரிட்டில் ஷெல்லக்கைஊற்றிவைக்கவும். பிறகு எல்லாவற்றையும் ஒன்ருகச்சேர்த்துக்கொண்டுகெட்டியான ஜாடிதலில் ஊற்றி அழகானலேபிள்கள்ஒட்டி மார்க்கட்டில் பகிரங்கப் [illegible]

[illegible]ற்சி மெய்வருந்தக்கூலிதரும்